# பாரதியின் பொதுவுடைமை சிந்தனைகள்

*திருமதி கி. இளவரசி, எம்.,ஏ.,எம்.ஃபில்.,*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
ஜவர்ஹலால் நேலு அரசு கலைக் கல்லூரி
போர்ட் பிளையர், அந்தமான்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5209

## முன்னுரை

பொதுவுடைமை என்பது உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் சமுதாயத்தில் எல்லோருக்கும் எல்லாப் பொருளும் கிடைக்கச் செய்வது ஆகும். உலகில் மக்கள் அனைவரும் சமம் என்றும், மக்களுக்கு சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்றும் கூறும் கொள்கை சமத்துவம் எனப்படும். பொதுவுடைமை என்ற ஒன்றினால் மட்டுமே மொழி, மதம், இனம், நிறம் என்ற பல பிரிவினைகளால் வேறுபடும் மனித குலம் ஒன்றாக இருக்க முடிகிறது. மகாகவி பாரதியார் எப்பொழுதுமே பொதுவுடைமை கருத்து களை தம் கவிதைகள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை இக்கட்டுரை வழி காணலாம்.

## பாரதியின் பார்வையில் சமுதாயம்

நம்மிடையே பொருளாதார ஏற்றத்தாழிவுமூள், சாதிப்பிரிவுகள், சாதிப் போராட்டங்கள், சமயச் சண்டைகள், பெண் விடுதலை, கல்வி சார்ந்த கலைகள், ஒற்றுமைப்பண்பு, மனிதநேயம் இவை அனைத்தும் காணப்படுகின்றது. இவை அனைத்திலும் பாரதியார் தன் பார்வையைச் செலுத்தியுள்ளார்.

சமுதாய அமைப்பில், வளர்ச்சி நோக்கில் ஏற்படும் சிறு மாற்றங்களைச் சமுதாயச் சீர்திருத்தம் என்றும், அதன் அடிப்படையில் தோன்றும் எழுச்சிகளைச் சமுதாய மறுமலர்ச்சி என்றும் கூறுவார்கள். பாரதியார் நம் சமுதாயத்தின் அடிப்படையை மாற்றிச் சமுதாய மறுமலர்ச்சியைக் காண விரும்பினார்.

## செகத்தினை அழித்திடுவோம்

இறைவன் படைப்பில் அனைத்து இயற்கை வளங்கலும், விளைச்சலும் அனைவருக்கும் பொதுவானவை. ஆனால் ஒருசிலர் சொத்துக்களை குவித்து இது எங்கள் உடைமை என்று கூறி, உழைக்கும் மக்களை பஞ்சத்திலும், பசியிலும் தவிக்கவிட்டுத் தாம் மட்டும் உண்டு மகிழ்ந்திருக்கின்றனர். உழைக்கும் மக்களுக்கு நியாமாக என்ன கிடைக்க வேண்டுமோ அதுவம் மறுக்கப்படுகிறது.

அவர்களின் உரிமை பரிக்கப்படுகிறது. அந்நிலை கண்டு பாரதியார்,

**"உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டு களித்திருப்போரை**
**நித்தனை செய்வோம்"**

**(சுதந்திரப்பள்ளு - சரணம் 4)**

எனப் பாடுகிறார்.

ஒரு சமுதாயத்தை சீர்குலைப்பவற்றுள், இல்லாமமை, கல்லாமை, தீமை இம்மூன்றும் அடங்கும். இல்லாமை மிகக்கொடியது. எனவே, "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" எனப் பாரதியார் விரும்பினார். பசியின் கொடுமையை அனுபவித்து அறிந்தவர் பாரதியார். பசியால் உயிர் துடித்துச் சாகின்ற மக்களைப் பார்த்த போது கொதித்தெழுந்தார். அக்கொதிப்பில் எழுந்த கவிதை தான்,

**"இனி ஒரு விதிசெய்வோம் - அதை**
**எந்த நாளும் காப்போம்**
**தனி ஒருவனுக்கு**
**உணவில்லையெனில்**
**செகத்தினை அழித்திடுவோம்"**

**(பாரத சமுதாயம் - சரணம் 2)**

என்பதாகும். இந்த உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் பசியினால் வருந்தக் கூடாது, அவ்வாறு பசியினால் வருந்தக் கூடிய சுழல் இருக்குமானால், அதற்கு காரணமான இந்த உலகத்தையே அழித்திடுவோம் என்கிறார்.

## தீயை அகத்தினிடை மூட்டுவோம்

பாரதியார் வாழ்ந்த காலரத்தில் நாட்டுக்கு அரசியல் சீர்திருத்தம் தேவையா? சமுதாயச் சீர்திருத்தம் தேவையா என்ற கேள்வி எழுந்தது. பாரதியார் சமுதாயச் சீர்திருத்தமே தேவை என்றார். சமுதாயம் சீர்மைப்பட்டால் மக்களால் அமைக்கப்படும் அரசியல் செம்மைப்படும் என்பது பாரதியின் எண்ணம்.

எனவே, சமுதாயத்தில் வாழும் மக்கள் தம் அறளியாமையிலிருந்தும், அடிமைத்தனத் திலிருந்தும் விடுபட வேண்டும் அநீதி கண்டு பொங்கி எழ வேண்டும், அடிமை தளையை அறுத்தெரிய வேண்டும். புரட்சி வெடிக்க வேண்டும், புதிய சமுதாயம் அமைய வேண்டும் என்று பாரதியார் எண்ணினார். ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியும், பிரெஞ்சு நாட்டில் ஏற்பட்ட புரட்சியும் போன்று இந்தியாவிலும் ஏற்பட வேணடடும் எனக் கருதினார்.

**"தீயை அகத்தினிடை மூட்டுவோம்"**

என்றும்

**"ஈயைக் கருடநிலை ஏற்றுவீர்"**

**(பல்வகைப் பாடல்கள் - சொல் 4)**

என்றும் மக்கள் உள்ளத்தில் புரட்சிக் கனலை மூட்டுகின்றார்.

"உன் உள்ளத்திலே சக்திக் கனலை மூட்டு, புது வேகமும், புது உற்சாகமும் ஏற்படும். தரையில் சுற்றித் திரிந்து அகப்படும் அசிங்கத்தை உண்டு, சமுதாயத்துக்குக் கேடு விளைவித்து வாழும் ஈயாக நீ வாழாதே! வானில் எழுந்து வட்டமிடும், கூரிய பார்வையும், இலக்கைப் பாய்ந்து சென்று எடுக்கும் ஆற்றலுமுள்ள கருடனாக நீ மாறுக. அப்போது இன்பம் வாழ்வில் மலை போலக் கொட்டும். அப்போதும் துன்பம் ஏற்படலாம் அதைக்கண்டு துவண்டு விடாதே. அதனை வெட்டிவீழ்த்து, வேகம் விவேகம் இந்த இரண்டும் உணக்குத் தேவை, என பாரதியார் கூறும் இப்பகுதி மக்கள் மனதில் தூவும் புரட்சி விதைகள் அல்லவா? பாரதியார் ஒவ்வொரு இந்தியக் குடிமகன் உள்ளத்திலும் சக்திக்கனலை மூட்டி, ஈயாக இருந்தமவர்கள் பரிணாம வளர்ச்சியடைந்து கருடனாக மாறிப் புரட்சி செய்ய வேண்டும் என்கிறார். ஒற்றுமை உணர்வை வளர்க்கின்றார்.

மக்கள் சக்திளைப் பராசக்தியாகக் கண்டவர் பாரதியார். அதனால் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சிக்குக் காரணம் பரா சக்தியின் கடைக்கண் பார்வைதான் எனக் கூறுகின்றார்.

***“மகாகவி பராசக்தி உருசிய நாட்டினின்***
***கடைக்கண் வைத்தாள், அங்கே***
***ஆகாஎன் றெழுந்துபார் யுகப்புரட்சி”***

***(புதிய ருஷியா - 1)***

ஜார் சக்கரவர்த்தி என்ற கொடுங்கோலனின் ஆட்சியிலும் இரஷ்ய நாட்டில் பொய், சூது, தீமை எல்லாம் பாம்புகள் போல் மலிந்து வளர்ந்தன. விளைவு:

***“உழுது விதைத்து அறுப்பாறுக்கு***
***உணவில்லை***
***பிணிகள் பல உண்டு பொய்யைத்***
***தொழுது அடிமைச் செய்வார்க்குச்***
***செல்வங்கள் உண்டு***
***உண்மை சொல்வோர்க்கெல்லாம்***
***எழுதரிய பெருங்கொடுமைச்***
***சிறையுண்டு***
***தூக்குண்டே இறப்பது உண்டு”***

***(புதிய ருஷியா - 3)***

இத்தகைய மக்கள் புரட்சிக்கு இந்தியாவின் வீர இளைஞர்களை ஆற்றுப்படும் முயற்சி அல்லவா “புதிய ருசுயா” என்ற கவிதை!

எல்லோரும் ஓர் நிறை

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இல்லாத, வறுமை இல்லாத அனைவரும் சமம் என்ற வளமான சமுதாயத்தைக் காண விரும்பிய பாரதியார் அந்தச் சமுதாயத்தில்,

***“எல்லாரும் ஓர் நிறை எல்லாரும்***
***ஓர் விலை***
***எல்லாரும் இந்நாட்டு மன்னர்”***

***(பாரத சமுதாயம், சரணம் - 4)***

எனக் கூறுகின்றார். எல்லோரும் ஒரே சிறப்புத்தன்மை உடையவர், எல்லோரும் ஒரே மதிப்புடையவர், எல்லோரும் இந்நாட்டின் முழு உரிமைப்பெற்ற ஆட்சியாளர்கள் என்கிறார்.

சமுதாயத்தின் மேடு பள்ளங்களாய்ச் செல்வமும், வறுமையும் காணப்படுவதைச் சமன்படுத்தி, நம்நாட்டில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இல்லாமை நிலை வேண்டும் என்று ஆசைப்படுகின்றார் பாரதியார்.

அடிமைத்தனம் இல்லாத, ஏழ்மை இல்லாத, ஏற்றத்தாழ்வு இல்லாத பொதுவுடைமைச் சமுதாயம் அமைய மக்கள் எண்ணத்தில் புரட்சி ஏற்பட வேண்டும் என்றும், அவ்வாறு அமையும் புதிய சமுதாயம் பொருளாதாரச் சமத்துவம் உடையதாக,

***“ஏழை என்றும் அடிமை என்றம்***
***எவனுமில்லை ஜாதியில்***
***இழிவு கொண்ட மனிதரென்பது***
***இந்தியாவில் இல்லையே,***
***வாழி கல்வி செல்வம் எய்தி***
***மனம நிகழ்ந்து கூடியே***
***மனிதர் யாரும் ஒருநிகர்ச்***
***மானமாக வாழ்வமே”***

***(விடுதலை - 2)***

என்று கூறும்படி அமைய வேண்டும் என்றம் பாரதியார் விரும்புகின்றார்.

**தொழில்கள் செய்வோம்**

பாரதியார் விரும்பும் இன்பம் பெற வேண்டுமெனில் எல்லோரும் தொழில் செய்ய வேண்டும். “கோடி வகை தொழில்கள் செய்வோம்” செய்யம் தொழிலைத் தெய்வமாக மதித்தல் செல்வம் தானே வந்து சேரும். உடலை உறுதியாக்கிப் பல தொழில்கள் செய்து செல்வத்தைப் பெருக்கி இந்திய நாட்டை உலக அரங்கில் உயர்த்த வேண்டும் என்கிறார். ஆகவே,

***“கூடும் திரவியத்தின் குவைகள் - திறல்***
***கொள்ளும் கோடிவகைத் தொழில்கள் - இவை***
***நாடும் படிக்கு வினை செய்து - இந்த***
***நாட்டோர் கீர்த்தி எங்கும் ஓங்க”***

***(யோக சிக்தி - 6-9)***

வரம் வேண்டுகிறார். இந்தியா தன்னிறைவு பெற்ற நாடாகத் திகழ வேண்டும் அதுவரை உறக்கம், ஓய்வு என்பதே நமக்கு இல்லை என்றும், பெரிய ஆலைகள் முதல் சிறிய பொருள்களாகிய குடைகள், உழுவதற்குப் பயன்படும் பொருற்கள் முதலியன நாமே நம் நாட்டில் செய்ய வேண்டும் என்றம் கருதி,

***“ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்***
***செய்வோம்***

**ஆலைகள் வைப்போம் கல்விச்**
**சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்வோம்**
**குடைகள் செய்வோம் உழு**
**படைகள் செய்வோம்,**
**கோணிச் செய்வோம் இரும்**
**பாணிகள் செய்வோம்"**

***(பாரத தேசம் - 9-10)***

என்றும் பாடியுள்ளார். இந்தியா கருத்துச் செலுத்த வேண்டிய துறைகள் இரண்டு எனக் குறித்தார்.

***அவை:***

*1)* உழவு

*2)* தொழில்

இவையிரண்டும் தேக்கமுற்றுக் கிடந்த நிலை பல பாடல்களில் குறிக்கப் பெறுகின்றது. இவ்விரு செயல்களும் சிறப்புற மனிதர்களிடம் சோம்மல் ஒழிந்து ஊக்கம் பிறக்க வேண்டும் எனக் கூறுகின்றார்.

### முடிவுரை

இவ்வாறாக மேற்கண்ட கட்டுரையில், பாரதியின் பொதுவுடைமை சிந்தனைகள், சமுதாயத்தின் மீதும் மனித குலத்தின் மீதும் அவருக்கிருந்த பற்று, நம் இந்தியத் தாய்திருநாடு உலக அரங்கில் எவ்வாறு உயர்ந்து வளர வேண்டும் என்ற அவரது தொலைநோக்குப் பார்வை என விரிவாகக் கண்டோம்.

### பார்வை நூல்கள்

*1.* பாரத சமுதாயம்
*2.* புதிய ருசுயா
*3.* யோக சித்தி
*4.* பாரதியார் கவிதை தொகுப்பு